Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 3, October 2023 E-ISSN: 2583-0481

# Agriculture in Tamil Literature

**Dr J. Kavitha,** Assistant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore.
ORCiD: https://orcid.org/0000-0002-3938-1985
DOI: 10.5281/zenodo.8397614

## Abstract

*Sangam Literature depicts the life of the ancient Tamils who lived in harmony with nature and gives descriptive references to ancient agriculture. The basic occupation of the Tamil people was farming. The word 'Velal' in Sangha literature points to agricultural work. Thirukkural highlights the idea that helping a person without effort is as useless as the wind in the hand of a coward. During the Sangam period, ploughing was hailed as a life-saving occupation. Land is the basis of agriculture. "Tolkappiyam" and Sangha Literature take the fact that the Tamils cultivated and lived in the land classified into five landscapes according to the natural structure of the land. The Kurinji hills have forest nature including hilly terrain, hill plantation etc. The forest called Mullai also stands for forest land and cattle breeding. Marutham is a place of agricultural field and refers to the nature of agricultural cultivation. Neithal is the coastal area, which signifies the abundance of fish. Palai is a parched land where robbing is the occupation. The ancient Tamils knew the chance of rain before the start of the season by the movement of the clouds. They did agriculture by using the water bodies according to the time and economically flowing the water. Hence, Sangam Tamil Literature describes the excellence of ploughing and the excellence of agriculture. So, this article takes up a study to interpret the evidence of agriculture in Tamil Literature.*

**Keywords:** Agriculture, Tamil People, Sangam literature.

## References

[1] Rajagauthaman. *Paripadal*. New Century Book House, Coimbatore, 2020.
[2] Avvai. Su. Duraisamypillai. *Purananoor*u. Saratha Patipagam, 2008.
[3] Dr. V. Dillibabu. "Pazhamozhinanooru Kattum Velanmai." *International Journal of Tamil Language and Literary Studies*, Special Issue 2, 2022.
[4] V. Subha Manickam. *Thirukkural*. Manivasakar Publishing House, Chennai, 2000.
[5] Dr. S. Kandhan. *Payirai Pathukathal*. Thirukkural Special Issue – 2, 2019.
[6] Avvai.Su. Duraisamipillai. *Akananoor*. Saratha Patipagam, 2008.
[7] Avvai.Su. Duraisamypillai. *Kurunthogai*. Saratha Patipagam, 2008.
[8] M. Ramamurthy. *Sirupanartupadai*. Gaura Publishing House, Chennai, 2020.
[9] M. Ramamurthy. *Perumpanatruppadai*. Gaura Publishing House, Chennai, 2020.
[10] M. Ramamurthy. *Malapadukadam*. Gaura Publishing House, Chennai, 2020.
[11] S. V. Subramanian. *Kambaramayanam*. Manivaskar Publishing House, Chennai, 2011.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# தமிழ் இலக்கியத்தில் விவசாயம்

**முனைவர் ஜெ. கவிதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.
ORCiD: https://orcid.org/0000-0002-3938-1985
DOI: 10.5281/zenodo.8397614

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியங்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பழங்காலத் தமிழர்களின் வாழ்க்கையைச் சித்தரித்து, பழங்கால விவசாயத்தைப் பற்றிய விளக்கக் குறிப்புகளைத் தருகின்றன. தமிழ் மக்களின் அடிப்படைத் தொழில் விவசாயம். சங்க இலக்கியங்களில் 'வேளாள்' என்ற சொல் விவசாயப் பணியைச் சுட்டுகிறது. முயற்சியின்றி உதவி செய்வது, கோழையின் கையில் காற்று வீசுவது போல் பயனற்றது என்ற கருத்தை திருக்குறள் எடுத்துக்காட்டுகிறது. சங்க காலத்தில் உழவுத் தொழிலே உயிர் காக்கும் தொழிலாகப் போற்றப்பட்டது. விவசாயத்தின் அடிப்படை நிலம். "தொல்காப்பியமும்" சங்க இலக்கியமும் தமிழர்கள் பயிரிட்டு வாழ்ந்தார்கள் என்பதை நிலத்தின் இயற்கை அமைப்புக்கேற்ப ஐந்து நிலப்பரப்புகளாக வகைப்படுத்துகின்றன. குறிஞ்சி மலைகள் மலைப்பாங்கான நிலப்பரப்பு, மலைத் தோட்டங்கள் உள்ளிட்ட வன இயல்புகளைக் கொண்டுள்ளன. முல்லை எனப்படும் காடு வன நிலம் மற்றும் கால்நடை வளர்ப்பையும் குறிக்கிறது. மருதம் என்பது விவசாய நிலம் மற்றும் விவசாய சாகுபடியின் தன்மையைக் குறிக்கிறது. நெய்தல் என்பது கடலோரப் பகுதி, மீன்கள் மிகுதியாக இருப்பதைக் குறிக்கிறது. பாளை வறண்டு கிடக்கும் நிலம், கொள்ளையே தொழிலாக உள்ளது. பருவம் தொடங்கும் முன்பே மழை பெய்யும் வாய்ப்பை மேகங்களின் அசைவு மூலம் பழங்காலத் தமிழர்கள் அறிந்திருந்தனர். காலத்திற்கேற்ப நீர்நிலைகளை பயன்படுத்தி தண்ணீரை சிக்கனமாக பாய்ச்சி விவசாயம் செய்தனர். எனவே, சங்கத் தமிழ் இலக்கியம் உழவின் சிறப்பையும் விவசாயத்தின் சிறப்பையும் விவரிக்கிறது. எனவே, இக்கட்டுரை தமிழ் இலக்கியத்தில் விவசாயம் பற்றிய சான்றுகளை விளக்குவதற்கு ஒரு ஆய்வை மேற்கொள்கிறது.*

**முக்கிய வார்த்தைகள்:** விவசாயம், தமிழ் மக்கள், சங்க இலக்கியம்.

**முன்னுரை**

பண்டைத்தமிழர் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த வாழ்வியலைச் சித்திரிக்கும் இலக்கியங்கள் பயிர்த் தொழில் பற்றிய குறிப்புகளை விளக்கமாகத் தந்துள்ளனர். அக்காலத்தில் உழவர்கள் வேளாண் மாந்தர் எனப்பட்டனர். அவர்களது அடிப்படைத்தொழில் பயிர்த்தொழிலை ஒம்பிக்காத்து நல்ல விளைவினைப் பெருக்குவதாகும். சங்க இலக்கியங்களில் வேளாளர் என்ற சொல், “தொடர்ந்தேம் எருது தொழில் செய்யா தோட விடுங்கடன் வேளாளர்க் கின்று” (பரி, பா. 20. 63 - 64) என வரும் பரிபாடல் அடிகளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

பொதுவாகத் தொல்காப்பியர் காலந்தொடங்கிச் சங்ககாலம், சங்கமருவிய காலம் முடிய வேளாண்மை என்னுஞ் சொல் பெரும்பான்மை "உதவி" என்ற பொருளிலும் சிறுபான்மை உழவுத்தொழில் என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளது. அறிவியல் நோக்கில் வேளாண்மை என்ற சொல் பயிர் செய்தல், கால்நடைகள் வளர்த்தல், மரம் வளர்த்தல், மனித சமுதாயத்திற்குப் பயன்படும் ஒவ்வொரு பயிரையும் மற்றும் உயிர்களையும் வளர்த்தல், கோழிப்பண்ணை, பால் பண்ணை எனப் பல்வேறு பொருளைத்தருகின்றது. இல்லறத்தில் இருந்து கொண்டு பொருளை ஈட்டுவது விருந்தினர்க்கும், நல்லவருக்கும் உதவி செய்வதற்கேயாகும். உதவி செய்தல் என்னும் பெருநிலை, முயற்சி என்னும் பண்பின்கண் அமைந்து கிடக்கின்றது. முயற்சி இல்லாதவன் உதவி செய்ய முற்படுவது கோழையின் கையில் உள்ள வான்போலப் பயனற்றதாகும் என்பன போன்ற கருத்துகளைத் திருக்குறள் எடுத்துக் கூறுகிறது. பண்டைத்தமிழரின் வாழ்வியலைச் சித்திரிக்கும் சங்க இலக்கியங்கள் பயிர்த்தொழிலைப் பற்றிய செய்திகளைப் பல்வேறு நிலைகளில் விளக்கமாகத்தருகின்றன. சங்க காலத்தில் உழவுத்தொழில் உயிர் காக்கும் தொழிலாகப் போற்றப்பட்டது. அத்தொழிலுக்குத் தேவையான யாவும் பெற்றுச் சிறந்து விளங்கியது. வேளாண்மைக்கு அடித்தளமாக அமைவது நிலமும் நீரும். இவற்றின் இயையே உணவுப்பொருள்களின் ஆக்கமாகும். "உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே" (புறம் 18. 21) என்ற வரியின் மூலம் அறியலாம்.

**நிலப்பாகுபாடு**

வேளாண்மை செய்தற்கு அடிப்படையானது நிலம். அந்நிலத்தினை இயற்கை அமைப்பிற்கேற்ப நான்காக வகைப்படுத்திப் பயிரிட்டு வாழ்ந்தனர் தமிழர் என்பதைத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் எடுத்து இயம்புகின்றன. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை, மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி, வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்பதனை, "முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" என வரும் தொல்காப்பிய அடிகள் உணர்த்துகின்றன. குறிஞ்சி என்ற மலையும் மலைசார்ந்த நிலப்பகுதி, மலைத் தோட்டம் முதலியவற்றை உள்ளடக்கிய வனவள இயலைச்சுட்டுகின்றது. முல்லை என்ற காடும் காடு சார்ந்த நிலப்பகுதி கால்நடை இயலை விளக்கி நிற்கின்றது. வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருதம் என்பது வேளாண்மை இயலைக்குறிப்பிடுகின்றது. கடலும் கடல் சார்ந்த இடமாகிய நெய்தல் என்பது மீன் வள இயலை உணர்த்துகின்றது. இன்றைய அறிவியல் வளர்ச்சியால் மேலே கூறிய நான்கு பெரும் பிரிவுகளுடன் வேளாண்மைப்பொறியியல், மனைஇயல் என்ற இருபெரும் பிரிவுகளும் வேளாண்மையுள் அடக்கிக்கூறப்படுகின்றன. எனவே பண்டைத் தமிழர் கொண்டிருந்த நிலப்பாகுபாடு அவர்கள் காலத்தில் வழங்கிய வேளாண்மைப் பிரிவுக்கோட்பாட்டை விளக்கும் வகையில் எழுந்ததேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலத்தைத் "துடவை" (குறுந். 105) என்றும், மரங்களை அழித்து விளைநிலமாக்கப்படும் புதிய புனத்தை "இதை" (அகம். 394. 3) என்றும், பழமையான

விளைநிலத்தை "முதைபுனம்" (குறுந். 105. 1) என்றும் குறித்தனர். முல்லை நிலத்தில் தரிசாய்க் கிடந்த இடத்தை "கொல்லை" (அகம். 89. 17) என்றும், மரங்கள் நிலைந்த முல்லைப்பகுதியைப் "புறவு" (சிறு. 169) "கானம்" (குறு. 21. 4) என்ற சொற்களாலும் குறிப்பிட்டனர். மருத நிலப்பகுதிகள் கழனி, பழனம், வயல், செறு என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் கழினி என்பது சேற்று வயலையும் பழனம் என்பது நெல் வயலையும் குறிக்கும். மருத நில விளை நிலங்களை வயல் என்ற சொல்லால் குறித்தனர். மேற்கூறிய கருத்துகளிலிருந்து அக்கால மக்களின் நிலப்பாகுபாட்டினை ஒருவாறு அறியலாம்.

**நீர்நிலை**

பயிர்தொழிலுக்கு நிலத்தை அடுத்து நீர் வளம் இன்றியமையாத தாகின்றது. ஒரு நாட்டின் வளமும் நலமும் நீர் வளத்தைக்கோண்டே அமையும். நீர் இல்லாமல் உலக இயக்கம் நடைபெறாது என்பதை வள்ளுவர் வான்சிறப்பு அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களில் விளக்கிக் கூறியுள்ளார். உணவு, உடை, உறையுள் ஆகிய முன்றனுள் முதன்மையானது உணவு, அவ்வுணவுப்பொருள்களை உண்டாக்குவதோடன்றி மக்களுக்கு ஓர் உணவாகவும் அமைவது நீரே. பருவம் தொடங்கும் முன் மழை பெய்யும் வாய்ப்பினை மேகத்தின் இயக்கத்தைக் கொண்டு அறிந்தனர். அறத்கேற்பத் தம் பயிர்த் தொழில்களை அமைந்துக்கொள்வர். இதனை "பன்மர உயர்சினை மின்மினி விளக்கத்துச் செல்மழை இயக்கங் காணும்" (நற். 44. 10 - 11) என்னும் நற்றிணை அடிகளால் அறியலாம். குறிஞ்சி நிலத்தில் மலையினின்றும் வீழும் அருவியும், மலையில் அமைந்த கனையும், குறிஞ்சியின் இயற்கை நீர்நிலை ஆகும். சுனைநீரும் பயிர்த்தொழிலுக்குப் பயன்பட்டது என்பதை,

**மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி அருவியின் விளைக்கும் (குறு.371, 1—2)**

**அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர் "கால்யாப்ப (நற்.5.2)**

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம். காலத்திற்கேற்ப நீர்நிலைகளை பயன்படுத்தியும், நீரைச் சிக்கனமாகத் தக்க முறையில் பாய்ச்சியும் வேளாண்மை செய்தனர் என்பதை அறிகின்றோம்.

**உழவியல் முறைகள்**

உழவுத் தொழிலை மேற்கொள்வார் உழவர் எனப்பட்டனர். உழத்தல் என்பது இடைவிடாது முயலும் மெய்ம்முயற்சியைக் குறிக்கும் சொல்லாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் உழவுத் தொழிலின் மேன்மையையும், உழவரின் சிறப்பையும் எடுத்தியம்புவது போல செய்முறைகளையும் அதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகளையும் இவை தொடர்பான பிற செய்திகளையும் விரிவாகக் கூறுகின்றன. உழுதொழில் என்பது உழுதல், உரமிடுதல், நீர் பாய்ச்சுதல், விதைத்தல், களைகட்டுதல், காத்தல், அறுவடை, பதப்படுத்துதல் எனப்பல கூறுகளாய் அமைவது. "அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்" என்பது பழமொழி.இம்மொழி இன்று உழவியலின் அடிப்படைத்தத்துவமாகப் போற்றப்படுகின்றது.

எருவிடுதல்

ஏரினால் நிலத்தை உழுது பண்படுத்துவது இன்றியமையாதது. எனினும் அதனினும் சிறப்பு வாய்ந்தது எருவிடுதல் ஆகும். வயல்களுக்கு இயற்கை உரம் இடுவதால், பயிர்கள் நன்கு வளர்ந்து சத்தான தானியங்கள் கிடைக்கின்றன. ஊட்டச்சத்து மிக்க தானியங்களை உண்ணும் மனிதனின் உடல் வலிமை பெறுகிறது. அதன் மூலம் பெறும் ஆற்றலால் பல்வேறு பணிகளைச் செய்து தன்னுடைய ஆயுளை நீட்டித்து இனிமையாக வாழ்தந்தான்.

**இருந்தமையாராகி இறப்பவெகுடல்**
**விரிந்தருவி வீழ்தரும் வெற்ப! அதுவே**
**அரிந்தரிகால் நீர்ப்படுக் குமாறு (பழ, நா. பா. 299)**

என்ற பாடலில் பகைவரை வென்றபிறகும் அவர் இறக்கும்படி அவர் மீது கோபம் செலுத்துவ தென்பது, அறுவடை முடிந்த பிறகு தலையரிந்து வைத்த அரிகாலை உழுது நீரிலே அழுகப்புதைக்கும் விதம் போன்றது என்பார். அறுவடை முடிந்த வயல்களில் நீண்டு கிடக்கும் தண்டுகள் உழவு செய்யப்பட்டு நீரிலே அழுத்தப்படுகின்றன. நீரிலே புதையுண்ட தண்டுகள் மக்கி உரமாக மாறுகின்றன இக்கருத்தை முன்றுறையரையனார் அற்புதமாகப் பதிவு செய்துள்ளார். இதனை நோக்க வயல்களுக்கு உரமிட்டு வேளாண்மை செய்துள்ளமையைத் தெளியலாம்.

**பயிரைப் பாதுகாத்தல்**

ஏர் கொண்டு நிலத்தை உழுது பயிருக்கு ஏற்ற நல்ல உரம் இடுதல் வேண்டும். அதன் பின் நீர் பாய்ச்சுதல் வேண்டும். இம்மூன்றையும் செய்தால் மட்டும் போதாது நிலத்திற்குப் பாதுகாப்பு மிகவும் இன்றியமையாதது ஆகும். இதனை வள்ளுவர்,

**ஏரினும் நன்றால் எருவிடுதல் நட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு (கு.எ. 1038)**

என்கிறார்.

**நீர் பாய்ச்சுதல்**

நன்செய் வயல்களில் பரவலாக நீர் நிறைந்து இருக்கும்படி பாய்ச்சுவர். இதனை நீர் பரந்த செறுவில் (புறம் 338. 2) என்று புறநானூறு குறிப்பிடுகிறது. வயல்களுக்கு நீரினை எவ்வாறு பாய்ச்சினர் என்பதனை மரைக்காஞ்சி,

**நீர்த்தெவ்வும் நிரைத்தொழுவர்**
**பாடுசிலம்பும் மிசை யேற்றச்**
**தோடு வழங்கும் அகலாம்பியிற்**
**கயன் அகைய வயல் நிறைக்கும் (மது. கா. 89 - 92)**

எனக்குறிப்பிடுகிறது.

**நாற்று நடுதல்**

பலமுறை நன்றாக உழப்பட்டுக்களை நீக்கி, உரமிட்டு நீர் பாய்ச்சப்பெற்ற வயல்களில் நாற்றுகளை நன்றாக அழுந்த நடுவர் என்பதை,

**முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவில் (பெரும்.212)**

**நீருறு செறுவில் நாறுமுடி யழுத்த (நற். 60.7)**

என்ற பாடலடிகள் உணர்த்தும்

**தீவிரச் சாகுபடி**

சாகுபடிக்குப்பயன்படுத்தப்படும் நிலத்தில் தீவிர அறிவியல் முறைகளில் நாம் விளைவைப்பெருக்க வேண்டும். பண்டைத்தமிழ் இலக்கியமான புறநானூற்றில் கூறப்படும் ஒரு கருத்து தீவிரச்சாகுபடி முறையை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. சோழ மன்னனாகிய கிள்ளி வளவனைப் பாடும் ஆவூர் மூலங்கிழார் என்னும் புவலர். "ஒருபிடி படியும் சீறிடம் எழுகளிறு புரக்கும் நாடு கிழவோயே" (புறம். 40) எனக்கூறி வாழ்த்துகின்றார். அளவில் சுருங்கிய சாகுபடி நிலத்தில் உயர்ந்த அளவு விளைச்சலைக் காண முடிந்தது என்ற குறிப்பை இப்பகுதி விளக்குகிறது.

**பல்பயிர்ச்சாகுபடி**

இன்றைய உலகில் வளர்ந்து வரும் தனிமனிதத் தேவைகளையும் சமுதாயத் தேவைகளையும் நிறைவு செய்ய வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உரியதாகும். இத்தேவைகளை நிறைவு செய்ய வேளாண்மைப் பெருமக்கள் பல்பயிர்ச்சாகுபடியைப் பின்பற்ற வேண்டியது அவசியம். இதனால் வேளாண் மக்களின் வாழ்வு வளம் பெறும் நாடு நலம் பெறும். கம்பராமாயணத்தில் அமைந்த ஒரு பாடல் இத்தகைய பல்பயிர்ச்சாகுபடி முறையை நுட்பமாகக் குறிப்பிட்டிருப்பது சிறப்பாக அறியத்தக்கதாகும்.

**கதிர்படு வயலின் உள்ள கடிகமழ் பொழிவின் உள்ள**

**முதிர்பழம் மரத்தின் உள்ள முதிரைகள் புறவின் உள்ள**

**பதிபடு கொடியின் உள்ள படிவளர் குடியின் உள்ள**

**மதுவளம் மலரில் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வர் (கம்ப.பால.நாட்டு 21)**

வயல்களில் உழுது நெல்லை விளைக்கும் அதே நேரத்தில் வேறு பல்வகைப் பயிர்களையும் கோசல நாட்டு உழவர்கள் விளைவித்துப் பயன் கண்டனர். வயல்களில் நெல்சாகுபடி, சோலைகளில் மலர்ச்சாகுபடி, தோட்டங்களில் பழச்சாகுபடி, மானாவரி நிலங்களில் புன்செய்ப் பயிர்ச்சாகுபடி, வீட்டுத் தோட்டங்களில் படர்ந்து விளையும் காய்கறிச்சாகுபடி எனப் பல்வேறு பயிர்ச்சாகுபடிகளைச் செய்து உழவர்கள் பயன் பெற்றனர் என்பது இப்பாடல் கருத்து.

கி.பி.12ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் பல்பயிர்ச்சாகுபடி முறை பின்பற்றப்பட்டு நடைமுறையில் இருந்து வந்தது என்பதை இப்பாடலால் அறியலாம். பல்பயிர்ச்சாகுபடி முறையை இன்றைய வேளாண்மை அறிவியலும் வலியுறுத்துகின்றது.

**கழிவுப் பொருள்களின் பயன்**

வேளாண்மைக் கழிவுப்பொருள்கள், கால்நடைக் கழிவுப் பொருள்கள், பண்ணைக் கழிவுப்பொருள்கள் ஆகியவற்றையும் பயனுள்ள வகையில் மாற்ற வேண்டும். இதனால்

சுற்றுப்புறச்சூழ்நிலைக் கேடு தவிர்க்கப்படுவதுடன் அதிக வருவாய் தரக்கூடிய சார்புத் தொழில்கள் பல உண்டாகவும் வாய்ப்புள்ளது. கழிவுப்பொட்களைப் பயனுள்ள வகையில் மாற்றுவதில் ஈடுபட வேண்டும் என்பது கம்பர் காட்டும் வேளாண்மை நுட்பமாகும். வீடுகளில் சமைக்கப்பட்ட உலைகளிலிருந்து வடிக்கப்பெற்ற கழுநீர் பெரு வெள்ளமாகிய கழிவுப்பொருள் பக்கத்திலுள்ள வயல்களில் பாய்ந்து அங்கு நடைப்பெற்ற செந்நெற் பயிரின் நாற்றை வளர்க்கிறது என்று கம்பர் கூறுவார்.

**நெட்டுமைக் கழுநீர் நெடுநீர் தந்தான்**
**பட்டமென்கமு கோங்கு படப்பைபோய்**
**நட்ட செந்நெல்லின் நாறு வளர்க்குமே (கம்ப. பால. 57)**

என்பது பாடல். இது கோசல நாட்டு மக்களின் விருந்தோம்பல் சிறப்பைப் பாட வந்ததாயினும், இப்பாடல் இன்றைய அறிவியல் நோக்கையும் குறிப்பாக விளக்கிக் காட்டுகின்றது. கழுநீர் ஆகிய வீட்டுக் கழிவுப்பொருள் அண்மையிலுள்ள வயல்நாற்றை வளர்க்கிறது எனக் கம்பர் கூறுகின்ற இக்குறிப்பு. கழிவுப்பொருளைப் பயனுள்ள வகையில் மாற்ற வேண்டும் என்ற இன்றைய அறிவியல் ஆராய்ச்சிக்கு வித்தாகவும் ஒத்தாகவும் அமைந்துள்ளது. அறுவடை முடிந்ததும் கிடைக்கும் தாவரங்களின் தண்டுப் பகுதிகள், சோளப்பதர், மக்கர்ச்சோளம், சூரிய காந்தியின் பூத்தண்டு, வாழையின் நார்த்தண்டு ஆகிய வேளாண்மை கழிவுப் பொருள்களைப் பயன்படுத்திக் காகித ஆலை முன்னோடித் திட்டமும் இன்றைய அறிவியலில் செயல்பட்டு வருகின்றது. சிறு அட்டைகள், தடித்த அட்டைகள், காகிதங்கள் ஆகியவை இந்த ஆலையில் வேளாண் கழிவுப்பொருள்களிலிருந்து செய்யப்படுகின்றன. ஆலைக்கரும்புச்சாறு, பாளையிலிருந்து வடியும் கள், தேனடையிலிருந்து ஒழுகும் தேன், மலர் மாலைகளிலிருந்து சிந்தும் தேன் ஆகியவை பெருக்கெடுத்து ஓடிக் கடலில் சேர, கடல்மீன்கள் அவற்றை உண்டு களித்தன என்பதும் மற்றொரு கம்பராமாயணப் பாடல் கருத்து இன்றைய அறிவியல் ஆராய்ச்சிகளின் மூலம் கால்நடைத் தொழுவங்களிலிருந்து கிராமப்புற வீடுகளிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவு நீரை மீன் வளர்ப்பதற்கும், பாசி வளர்ப்பதற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கம்பர் காட்டிய நுட்பம் இன்றைய அறிவியல் நுட்பத்தோடு பெருமளவில் புலனாகும்.

**புன்செய்ப்பயிர்களும் பயிரிடும் முறையும்**

புன்செய்ப்பயிர்களைப் பருவம் பார்த்துப் பயிர் செய்தல் இன்றிய மையாதது. குறிஞ்சியும் முல்லையும் நீர்வளம் குறைந்த பகுதிகளாயின் பருவ மழையை எதிர் நோக்கியே பயிர்த்தொழில் செய்யப்பட்டது. புன்செய்ப்பயிர்களாகிய தினை, வரகு ஆகியவற்றைக் கார்கால மழையின் ஈரம் புலருமுன் விதைப்பர். இப்பருவத்தில் உளுந்து, பயறு, அவரை போன்றனவும் செழித்து வளரும். குறிஞ்சி நில மக்கள் பருவ மழை தொடங்கு முன் மரங்களை வெட்டிக் கொளுத்தி விளைநிலம் உண்டாக்குவர். சந்தனம், அகில் போன்ற நறுமண மரங்களேயாயினு் வெட்டிவிட்டு உழுவர் என்பதை,

**நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய (மது. 286)**

**முதைபுனங் கொன்ற ஆர்கலி உழவர் (குறுந்.155. 1)**

என்ற பாடலடிகள் உணர்த்தும்.

**இலக்கியங்களின் வழி நெல்வகைகள்**

ஐந்து வகை நிலங்களின் சிறப்புக்கும், இயல்புக்கும் ஏற்றவாறு அங்கு விளையும் நெல்வகைகளையும் தரப்படுத்திக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தி உள்ளனர்.

**அ) செந்நெல்**

"செந்நெல்லை" நீர் வளஞ்சான்ற கழனியில் விளைவிப்பர். விளைந்த செந்நெல் சிவந்து கதிர்கள் வளைந்து இருக்கும். நெல்லில் சிவந்த நெல் சிறந்ததாகும் எனக்கூறப்பட்டுள்ளது. (அகம். 126 - 11)

**வெண்ணெல்**

"வெண்ணெல்லைக்" குளத்துப்பாசனத்தில் விளைவிப்பர் (புறம். 33 - 5) வெண்ணெல்லில் விளைந்த நெற்கதிர்கள் வெண்மையாக இருக்கும். (அகம். 204 – 10 - 12). சேர நாட்டின் துறைமுகப்பட்டினமாகிய தொண்டியில் வெண்ணெல் விளைந்தது (குறுந். 210. 2 - 3)

**இ) சாலி நெல்**

"சாலி" என்பது ஒரு நெல்வகை. இது ஆற்றப்பாசனத்தில் விளைவது. சாலி என்ற சிறந்த நெல்லின் பெயரில் "சாலியூர்" என்ற ஊரும் இருந்துள்ளது (மதுரை 87 - 88). காவிரி பாயும் சோழ நாட்டில் சாலி நெல்லைப் பயிர் செய்து ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் (பதிற். 29 - 3)

**ஈ) முடந்தை நெல்**

"முடந்தை நெல்" என்பது மருதநிலத்தில் விளைவது. இந்நெல் வளைந்த கதிர்களையுடையதாய் இருக்கும். இதன் தாள் மூங்கில் போல் நீண்டும் பருத்தும் இருக்கும் என்பதை பதிற். 29 - 3, 32 – 12 - 14 வாயிலாக அறியலாம்.

**உ) ஐவன நெல்**

"ஐவன நெல்" குறிஞ்சியில் விளையும் நெல். இதனை "ஐவன வெண்ணெல்" என்றும் "மலைநெல்" என்றும் வழங்குவர் (நற். 373 - 74, குறுந். 101-1). ஐவன நெல்லோடு தினையையும் சேர்த்து விதைப்பர் (புறம் 159. 15 - 17).

**ஊ) தோரைநெல்**

"தோரை நெல்" மேட்டு நிலத்தில் விளைகின்ற நெல் வகைகளுள் ஒன்றாகும். இந்நெல்லின் கதிர்கள் குட்டையாக இருக்கும் (மதுரை. 286 - 8). பருவ மழையில் விதைத்த தோரைநெல் மழை நீரைக்கோண்டே அழகிய கதிர்களோடு முற்றி விளையும் (மலை. 120 - 1)

**எ) குளநெல்**

"குளநெல்" குறிஞ்சியில் விளையும் நெல் வகைகளுள் ஒன்றாகும். பருவ மழையில் விதைத்துச் சுனைநீரை பாய்ச்சி விளைவிப்பர் (நற். 5 1 - 2)

**ஏ) தோப்பில் நெல்**

"தோப்பி" என்ற நெல்வகை புன்செய்யில் விளையும். இந்நெல்லானது சோறு சிவந்து பெரியதாக இருக்கும் (பெரும். 130 - 1)

**ஐ) மூங்கில் நெல்**

"மூங்கில் நெல்" லைப் பிற நெற்பயிர்கள் போல் விளைவிப்பதில்லை. மூங்கில் நெல் வெண்மை நிறமுடையதாக இருக்கும். இதனை "வெதிர் நெல்" என்றும் வழங்குவர் (அகம். 267. 10 - 11)

**முடிவுரை**

இங்ஙனம் தமிழ் இலக்கியங்கள் அரிய வேளாண்மைக் குறிப்புகள் பலவற்றைத் தாங்கி நிற்கின்றன. தொல்காப்பியர் காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையுள்ள இலக்கியங்களில் கிடைக்கும் வேளாண்மைக் குறிப்புகள் தமிழகத்தின் இருபது நூற்றாண்டுக்கால வேளாண்மை வரலாற்றை விரிவாய் விளக்குகின்ற சான்றுகளாயுள்ளன. என்பதை இக்கட்டுரை வழி அறியப்படுகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1] ராஜ்கௌதமன். *பரிபாடல்*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், கோவை, 2020.

[2] ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. *புறநானூறு*. சாராதா பதிப்பகம், 2008.

[3] முனைவர் வெ. டில்லிபாபு. "பழமொழி நானூறு காட்டும் வேளாண்மை." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, சிறப்புவெளியீடு 2, 2022.

[4] வ. சுப. மாணிக்கம். *திருக்குறள்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000.

[5] முனைவர். சு.கந்தன். *பயிரைப் பாதுகாத்தல்*. திருக்குறள் சிறப்பு வெளியீடு – 2, 2019.

[6] ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை. *அகநானூறு*. சாராதா பதிப்பகம், 2008.

[7] ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. *குறுந்தொகை*. சாராதா பதிப்பகம். 2008.

[8] முத்து.இராமமூர்த்தி. *சிறுபாணாற்றுபடை*. கௌரா பதிப்பகம், சென்னை, 2020.

[9] முத்து.இராமமூர்த்தி. *பெறும்பாணாற்றுப்படை*. கௌரா பதிப்பகம், சென்னை, 2020.

[10] முத்து.இராமமூர்த்தி. *மலைபடுகடாம்*. கௌரா பதிப்பகம், சென்னை, 2020.

[11] ச.வே.சுப்பிரமணியன். *கம்பராமாயணம்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2011.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.